சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No:56/2019 Date: 03.03.2025

பிரதிவாதி தரப்பு சாட்சி–3(Dw3) ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திகேயன் | சாதி | : | –– |
| த/பெ | : | சௌந்தரராஜன் | சமயம் | : | –– |
| கிராமம் | : | துலுக்கப்பட்டி | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுகா | : | விருதுநகர் | வயது | : | 43 |

<u>முதல் விசாரணை–</u>

நான் துலுக்கப்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். துலுக்கப்பட்டி கிராம பட்டா எண்.99 சர்வே எண்.59/5 74 செண்ட் பட்டா எண்.345 சர்வே எண்.60/3 ஏக்கர் 1 செண்டு 28ல் மேல்புறம் செண்ட் 27, விருதுநகர் தாலுகா துலுக்கப்பட்டி கிராம பட்டா எண்.345 சர்வே எண்.60/3 ஏக்கர் 1 செண்ட் 29ல் கீழ்புறம் ஏக்கர் 1 செண்ட் 1 சம்மந்தப்பட்ட 10(1)சிட்டா, அ பதிவேடு எண்ணம்–2, பழைய 10(1) கைசிட்டா, பசலி எண்.1431, 1432, 1433 ஆகிய ஆண்டுகளுக்கு ராம்கோ நிறுவனம் தீர்வை செலுத்தியுள்ளது. அதன் சான்றிட்ட நகல்கள் எண்ணம்–3. (9 தாள்கள்) **சா.சா.ஆ.1(வரிசை).**

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் துலுக்கப்பட்டி கிராமத்தில் ஜீலை 2022ல் இருந்து பணிபுரிந்து

வருகிறேன். ராம்கோ சிமெண்ட் பேக்டரி பெயருக்கு மாற்றம் செய்வதற்கு முன்பு துலுக்கப்பட்டி கிராமம் சர்வே எண்.59/5 உள்ள 74 செண்ட் காளிமுத்து மகன் பெருமாள் சாமி பெயரில் இருந்தது. சர்வே எண்.60/3 1 ஏக்கர் 28 செண்ட் பட்டா எண்.345ன் படி காளிமுத்து நாயக்கர் மகன் பெருமாள்சாமி பெயரில் இருந்தது. நில உடைமை திட்டத்தில் சர்வே எண்.59/5 என்பது காளிமுத்துமகன் காளிமுத்து என்று இருந்ததில் இருந்தே டி.பி.டி.3415/2012ன் படி காளிமுத்து நாயக்கர் மகன் பெருமாள் சாமி பெயருக்கு மாறியுள்ளது. சர்வே எண்.60/3 1 ஏக்கர் 28 செண்ட் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் படி காளிமுத்து நாயக்கர் மகன் பெருமாள்சாமி என்று இருந்தது. காளிமுத்து பெயரில் இருந்து பெருமாள்சாமி நாயக்கர் பெயருக்கு பட்டா மாறுவதற்கு முன்பு காளிமுத்துவின் மற்ற வாரிசுகளுக்கு அறிவிப்பு கொடுத்தற்கான குறிப்புகள் இல்லை. ராம்கோ சிமிண்ட் பெயருக்கு 2019ல் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. அவ்வாறு பட்டா மாற்றம் செய்வதற்கு முன்பு பெருமாள்சாமி வாரிசுகளுக்கு அறிவிப்பு கொடுத்தற்கான குறிப்புகள் இல்லை. மேற்படி சொத்துக்கள் பெருமாள் சாமி நாயக்கருக்கு பூர்வீக சொத்துக்கள் என்பதால் பெருமாள்சாமிநாயக்கர் வாரிசுகளிடம் எந்த வித ஆட்சேபணையும் கேட்காமல் ராம்கோ சிமிண்ட் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா வழக்கு நிலுவையில் இருப்பதால் 1431, 1432, 1433 வருடத்திற்கான வரி பெருமாள்சாமி வாரிசுகளை கேட்காமல் மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல, வழக்கு நடக்கும் விபரம் தெரியாது. பெருமாள்சாமியின் வாரிசுகள் ராம்கோ சிமிண்ட் பெயரில் வரி பெறக்கூடாது என்று எங்கள் அலுவலகத்தில்

ஆட்சேபணை தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. ஆட்சேபணை தெரிவித்தார்கள் என்றும், அதை மறைத்து ராம்கோ சிமிண்ட் பேக்டரிக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் பணியில் சேர்ந்த பின்பு மேற்படி சொத்துக்கள் சம்மந்தமாக சிவில் வழக்கு உள்ளதா என்ற விபரம் தெரிந்து கொள்ளவில்லை. எனக்கு சிவில் வழக்கு நடக்கும் விபரம் தெரியும் என்றும், மோசடியாக வரி ரசீது செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

<u>7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

கிராம ஆவணங்களில் எந்த மாற்றம் செய்தாலும் அதன் அருகில் குறிப்பு எழுத வேண்டும் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் வருவாய் துறையில் பட்டா மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். ராம்கோ சிமிண்ட் நிறுவனத்திற்கு பட்டா மாற்றியது சம்மந்தமாக எதிரான குறிப்புகள் எதுவும் சம்மந்தப்பட்ட ஆவணங்களில் இல்லை என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்களின் படி 02.01.2019 க்கு பின்பு சர்வே எண்.59/5, 60/3 உரிமையாளர் ராம்கோ சிமிண்ட் என்றால் சரிதான். ராம்கோ சிமிண்ட் நிறுவனத்தின் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்வது சம்மந்தமாக ஆட்சேபணை தெரிவித்து யாரேனும் மனு கொடுத்தார்களா என்றால் இல்லை.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். தற்பொழுது தாவா சொத்தை ராம்கோ சிமிண்ட் நிறுவனம் அனுபவித்து வருகிறது என்றால் சரிதான். மூல ஆவணங்களை பார்க்காமல் தீர்வை ரசீது பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து

பூர்வீக சொத்துகாளிமுத்து நாயக்கர் மகன் பெருமாள்சாமிக்கு பாத்தியப்பட்டது, அது பூர்வீக சொத்தா என்று தெரியாது. நான் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். முந்தைய ஆவணங்கள் காளிமுத்து நாயக்கர் மகன் பெருமாள்சாமி பெயரில் இருந்தது.